**சுருக்கம்**

பாசனம் – திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், கடனா பாசன அமைப்பு முறையின் கீழ் உள்ள காக்கநல்லூர் அணைக்கட்டினை ரூ.63.00 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைத்து நவீனப்படுத்தும் பணி – நிர்வாக அனுமதி அளித்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**பொதுப்பணி (ப்பி2) துறை**

**அரசாணை (3டி) எண் 5** | **நாள்: 24.02.2011**
திருவள்ளுவர் ஆண்டு 2042
மாசி 12

படிக்கப்பட்டது :

சென்னை, நீர்வள ஆதாரத்துறை, தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்) கடித எண் ஆ1 / 5468 / 2007, நாள் 03.09.2010.

*********

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், கடனா பாசன அமைப்பு முறையின் கீழ் உள்ள காக்கநல்லூர் அணைக்கட்டினை ரூ.63.00 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைத்து நவீனப்படுத்தும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கக் கோரி நீர்வள ஆதாரத் துறை, தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்) பின்வருமாறு கருத்துரு அனுப்பியுள்ளார்.

(அ) திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், அயன்திருவாலீஸ்வரம் கிராமத்தில் அமைந்துள்ள காக்கநல்லூர் அணைக்கட்டு, கடனா பாசன அமைப்பில் நான்காவது அணைக்கட்டாகும். இதன் கால்வாய் மேற்காணும் அணைக்கட்டில் ஆற்றின் வலதுபுறம் பிரிகிறது. காக்கநல்லூர் கால்வாயின் மொத்த நீளம் 8.30 கிலோ மீட்டர். மேற்படி கால்வாயில் உள்ள 16 மதகுகள் மூலம் 346.29 ஏக்கர் நிலங்கள் நேரடி பாசனமும், 7 கண்மாய்கள் மூலம் 472.09 ஏக்கர் நிலங்கள் மறைமுகப் பாசனமும், ஆக மொத்தம் 818.38 ஏக்கர் நிலங்கள் பாசனம் பெற்று பயனடைகின்றன. மேற்காணும் மொத்த ஆயக்கட்டில், 635.13 ஏக்கர் நிலங்களில் விவசாயம் செய்யப்படுகிறது. மீதம் உள்ள 183.25 ஏக்கர் நிலங்களில், தண்ணீர் பற்றாக்குறை காரணமாக, கடந்த ‘‘கார்’’ பருவத்தில் பயிர் செய்யப்படவில்லை.

(ஆ) காக்கநல்லூர் அணைக்கட்டு மிகவும் பழமையானதாகும். போதுமான நிதி ஆதாரமின்றி பல வருடங்களாக இவ்வணைக்கட்டில் மராமத்துப் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. அணைக்கட்டின் பிரதானச் சுவரின் மொத்த நீளத்திற்கும் நீர்க்கசிவு உள்ளது. மேலும், அணைக்கட்டின் ஒட்டுச்சுவர் முழுவதும் பழுதடைந்துள்ளது. இதனால், காக்கநல்லூர் அணையில் தண்ணீரை தேக்குவதற்கும், காக்கநல்லூர் அணையின் மூலம் பாசனம் பெறும் விவசாய நிலங்களுக்கு தண்ணீர் பங்கீடு செய்வதற்கும் மிகவும் சிரமமாக உள்ளது. இதன் காரணமாக, கடந்த ‘‘கார்’’ பருவத்தில் வண்டன்குளம் மற்றும் இலந்தகுளம் கண்மாய்களின் மொத்த ஆயக்கட்டு 183.25 ஏக்கரில் பயிரிடப்படவில்லை.

(இ) காக்கநல்லூர் அணைக்கட்டு மிகவும் சிதிலமடைந்துள்ளதாக சிற்றாறு வடிநிலக் கோட்டச் செயற்பொறியாளர் சான்றளித்துள்ளார்.

(ஈ) அணைக்கட்டின் பிரதானச் சுவர் முழுவதிலும் ஒட்டுச்சுவர் கட்டுதல், தண்ணீர் வழிந்தோடும் தரைத்தளத்தில் சேதமடைந்த பகுதிகளை புதுப்பித்தல், இடது கரையின் உள்ளும், புறமும் ஏற்பட்டுள்ள கரைகளின் மண் அரிப்பை தடுக்க பாதுகாப்பு தடுப்புச்சுவர் கட்டுதல் போன்ற பணிகளை மேற்கொள்ள 2010–2011ஆம் ஆண்டிற்கான தரப்படுத்தப்பட்ட விலை விவரப்பட்டியல் அட்டவணைப்படி ரூ.63.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

(உ) காக்கநல்லூர் அணைக்கட்டில் நவீனப்படுத்துதல் மற்றும் புனரமைத்தல் பணிகளை செய்து முடிக்கும் பட்சத்தில், விவசாயிகளுக்கு நல்ல முறையில் நீர் விநியோகம் செய்ய இயலும். மேலும், அணைக்கட்டிலிருந்து பாசனம் பெறும் மொத்த ஆயக்கட்டுக்குத் தேவையான தண்ணீரை அளிப்பதுடன், ''கார்'' பருவத்தில் பயிரிடப்படாமல் உள்ள விவசாய நிலங்களிலும் நீர் பங்கீடு மூலம் பயிர் செய்ய ஏதுவாக இருக்கும்.

2. எனவே, திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், கடனா பாசன அமைப்பு முறையின் கீழ் உள்ள காக்கநல்லூர் அணைக்கட்டினை ரூ.63.00 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைத்து நவீனப்படுத்தும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்குமாறு தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்) கோரியுள்ளார்.

3. தலைமைப் பொறியாளரின் (திட்ட உருவாக்கம்) கருத்துருவை பரிசீலனை செய்த பின்னர், அதனை ஏற்க அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி, திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், கடனா பாசன அமைப்பு முறையின் கீழ் உள்ள காக்கநல்லூர் அணைக்கட்டினை ரூ.63.00 இலட்சம் (ரூபாய் அறுபத்து மூன்று இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் புனரமைத்து நவீனப்படுத்தும் பணிக்கு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்புதல் அளித்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்ட பணிக்கான செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படும்.

> ''2701 பெரிய, நடுத்தரப் பாசனம் – 03 நடுத்தரப் பாசனம் – வணிகத் தன்மையுள்ளது – 145 கடானாத் திட்டப் பாசன ஏற்பாடு – I திட்டத்தில் சேராதது – AA கடானாத் திட்டம் – 18 பராமரிப்பு – 02 சிறப்புப் பராமரிப்பு'' (குதொகு 2701 03 145 AA 1826).

5. மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு ''புதுப்பணி'' (New Service) குறித்த செலவினமாகும். இதற்கான சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறப்பட வேண்டும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி, இச்செலவினம் முதலில் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன் பணமாக பெற்று மேற்கொள்ளப்படும். இதற்கான ஆணை நிதி (வ.செ. பொது–I) துறையிலிருந்து தனியாக வெளியிடப்படும். எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணம் ஒப்பளிப்பு பெற உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலுடன் நிதி (வ.செ. பொது–I) துறைக்கு விண்ணப்பிக்குமாறு முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை துணை மானியக் கோரிக்கை 2011–12 (Supplementary Estimates for 2011-12) இல் சேர்க்கும் பொருட்டு உரிய செயற்குறிப்பினை உரிய நேரத்தில் நிதி (வ.செ.பொது–I / பொப II) துறைக்கு அனுப்புமாறு முதன்மைத் தலைமைப்

பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. உலக வங்கி நிதியுதவியுடன், அணை புனரமைத்தல் மற்றும் மேம்பாட்டுத் திட்டம் (Dam Rehabilitation and Improvement Project) செயல்படுத்தப்படும்போது, அத்திட்டத்தில் காக்கநல்லூர் அணைக்கட்டு சேர்க்கப்படாததை உறுதி செய்யுமாறு முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை மற்றும் நீர்வள ஆதாரத்துறை, தலைமைப் பொறியாளர் (இயக்கம் மற்றும் பராமரிப்பு) ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், காக்கநல்லூர் அணைக்கட்டுக்கு அடுத்த 2 ஆண்டுகளுக்கு வழங்கப்படும் குறித்த கால பராமரிப்புத் தொகை (Periodical Maintenance Amount) நிறுத்தப்படும்.

7. இவ்வாணை, நிதித்துறையின் 24.02.2011 நாளிட்ட அ.சா. எண் 10533 / பொதுப்பணி– II / 2011 மற்றும் கூடுதல் பேரேடு எண் 2024ல் (இரண்டாயிரத்து இருபத்து நான்கு) பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**கி. தனவேல்**
**அரசு செயலாளர்**

பெறுநர்

முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை–5.
தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்), நீர்வள ஆதாரத் துறை, சேப்பாக்கம், சென்னை–5.
தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, மதுரை மண்டலம், மதுரை–2.
தலைமைப் பொறியாளர் (இயக்கம் மற்றும் பராமரிப்பு), நீர்வள ஆதாரத் துறை, சேப்பாக்கம், சென்னை–5.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (ஏ & இ) சென்னை–18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (தணிக்கை I) சென்னை–18.
மாவட்ட கருவூல அலுவலர், திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி.

**நகல்**

நிதி (பொ.ப II / வ.செ.பொ II / வ.செ.பொது I) துறை, சென்னை – 9.
இ.கோ. / உ.ந.

**(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)**

**பிரிவு அலுவலர்**